**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி.R.சுஜாதா, பி.எஸ்,சி., எல்., எல்., எம்.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.**

2026 ஆம் வருடம் பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை

**இ.ஏ. 1/2025.பி.எண்.8/2021 இன் ஓ.எஸ்.எண்.517/1998**

பொன்னுச்சாமி ... மனுதாரர்/எதிர்மனுதாரர்/1st J.D.

/ எதிர் /

மயில்சாமி ... எதிர்மனுதாரர்/மனுவாதி

இம்மனுவானது கடந்த 06.11.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.அருள்பிரகாசம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/மனுவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பாலசுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும். இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## ஆணையுரை

மனுதாரரால் பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள O.S.No.349/2023 வழக்கில் தீர்ப்பு கிடைக்கும் வரை நிறைவேற்று மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்து உத்தரவு பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 29-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:**

மனுதாரர், அசல் வழக்கு 517/1998-லும், நிறைவேற்று மனுவிலும், எதிர்மனுதாரர் ஆவார். எதிர்மனுதாரர்க்கு, மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்த அசல் வழக்கில் 517/1998-ல் கடந்த 22.12.2006 தேதியில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பின் அடிப்படையில் மனுச்சொத்தின் எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளித்துள்ள நிலையில் அதனை மனுதாரர் தொடர்ந்து இடையூறு செய்வதால் நிறைவேற்று மனுவினை தாக்கல் செய்து விசாரணைக்காக நிலுவையில் உள்ளது.

(2.2) மேற்படி எதிர்மனுவாதி மனுதாரர் மீது நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றாததால் மனுதாரரை சிவில் சிறையில் அடைக்க உத்தரவிடக் கோரி எதிர்மனுவாதி மனுத்தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுவாதி மனுவில் கூறியுள்ள சொத்து விபரத்தில் கண்டுள்ள சொத்துக்கள் பொட்டையாண்டிபுரம்பு கிராமம் க.ச. 46/பி4 நெ.காலையில் உள்ளது. மேற்படி காலையில் மொத்த விஸ்தீரணம் ந.ஏ.2.42 ஆகும். அதில் 89 செண்ட் பாத்தியம் இருப்பதாகக் கூறி மனுதாரருக்கு எதிராக ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுவாதி பெற்றிருந்தார். மேற்படி வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரவில்லை. மேலும் மேற்படி சொத்துக்கள் குறித்த மூல ஆவணங்களை சரிபார்த்த போதும் மனுதாரருக்குண்டான சொத்துக்களை பொருத்து எதிர்மனுவாதியும் உரிமை கோரியுள்ளது தெரிய வந்தது.

(2.3) அதன்பின்னிட்டு மனுதாரர் எதிர்மனுவாதி பேரில் உயர்திரு. பொள்ளாச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒ.எஸ்.நெ. 147/2016 ல் வழக்கு தொடர்ந்து அவ்வழக்கானது பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் பொட்டையாண்டிபுரம்பு கிராமம். ந.ஏ. 2.42 பூமியில் யார் ஒ.எஸ்.நெ. 349/2023 என்ற

எண்ணில் நிலுவையில் இருந்து வருகிறது. யாருக்கு எவ்வளவு பாத்தியம் என்பதை நிர்ணயிக்கப்பட்டால் தான் மேற்படி பூமி சப்டிவிசன் செய்ய இயலும். மேற்படி பூமி உட்பிரிவு செய்யாமல் இருப்பதால் செக்குபந்திகள், அளவுகள் குறித்து வேறுபாடுகள் உள்ளதாலும் யார் யாருக்கு எந்த பகுதியில் பூமி உள்ளது என்று சரியாக நிர்ணயம் செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. இந்த நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் அமைந்த பொட்டையாண்டிபுரம்பு கிராமம் க.ச. 46/பி4 நெ.காலை குறித்து உயர்திரு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் ஒ.எஸ்.நெ.349/2023 வழக்கின் தீர்ப்பிற்கு பின்னிட்டே இந்த மனுவினை நிர்ணயம் செய்ய முடியும். அதனால் மேற்படி நிறைவேற்று மனுவில் மேல் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க எனது தரப்பில் STAY மனுத்தாக்கல் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது.

(2.4) மேற்படி நிறைவேற்று மனுவில் மேல் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க மனுதாரர் தரப்பில் STAY மனுத்தாக்கல் செய்வதை ஏற்றுக் கொள்ளாவிடில் மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும். எனவே மாண்புமிகு நீதிமன்றம் பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் ஓ.எஸ்.நெ. 349/2023 வழக்கின் நிலுவையிலுள்ள நிலையில் மேற்படி வழக்கின் தீர்ப்பு வழங்கப்படும் வரை E.P.No. 8/2021 மனுவின் மேல் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டியது அவசியமாய் உள்ளது.

3) **<u>எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>** :

எதிர்மனுதாரர்/மனுதாரர் ஒப்புக் கொண்ட சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரர் நிரூபிக்க வேண்டும். மனுதாரர் இம்மனுவானது காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1998 ம் ஆண்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல்

செய்யப்பட்ட வழக்கில் 2006 ம் ஆண்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்படி இந்த தீர்ப்புக்கு எதிராக இந்த நடந்து கொண்டதால் 2021 ம் ஆண்டு நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் மனுதாரர் சொல்லும் வழக்கானது 2016 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டதாகும் இவ்வளவு காலதாமதம் கடந்து இம்மனுவை மனுதாரர் தாக்கல் செய்வதற்கு எவ்விதமான ஏற்றுக்கொள்ளகூடிய காரணங்களும் மனுதாரர் கூறவில்லை. மனுவில் கூறியுள்ள சங்கதிகளானது இந்த நிறைவேற்று நடவடிக்கைக்கு முற்றிலும் சம்மந்தம் இல்லாததாகும்,. இது நீதிமன்றத்தை திசைதிருப்புவதற்காக போடப்பட்ட மனுவாகும். சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காகவே இந்த மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் இருந்தே எதிர்மனுதாரர் தாவா தீர்ப்பின் பயனை அனுபவிக்க முடியாமல் இருப்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6) **பிரச்சனைக்கான தீர்வு:** மனுதாரர் நிறைவேற்று மனுவில் மேல்நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் அவரது மனுவிலே ஓ.எஸ்.நெ. 349/2023 தாக்கல் செய்து மேற்படி வழக்கு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்று தெரிவித்துள்ளார். மேலும் அசல் வழக்கில் தீர்ப்பு வரும் வரை நிறைவேற்று மனுவை நிறுத்தி வைக்க வேண்டுமென மனுதாரர் கூறியுள்ளார். ஆனால் அவரது மனுவில் எந்த காலத்திலும் இந்த

எதிர்மனுதாரரை இடையூறு செய்யவில்லை என்று கூறவில்லை.

(6.2) மேலும் ஓ.எஸ்.நெ. 349/2023 பாகம் பொருத்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்பது தெரியவருகிறது. ஆனால் இந்த நிறைவேற்று மனுவின் அசல் வழக்கு 1998 ஆண்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இந்த எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2001 ஆண்டு தீர்பு பிறப்பிக்கப்பட்டள்ளது என்பது தெரியவருகிறது. மேலும் நிறைவேற்று மனுவின் அசல் வழக்கை எதிர்த்து இதுநாள் வரையில் இந்த மனுதாரர் மேல்முறையீடு தாக்கல் செய்யாமல் இந்த மனுவை தாக்கல் செய்து இருப்பது நிறைவேற்று மனுவை காலம் கடத்துவதற்கு என்பது மேற்படி மனுவில் இருந்து தெரியவருகிறது.

(6.3) மேலும் நிறைவேற்று நீதிமன்றத்திற்கு வேறு நீதிமன்றத்தில் வழக்கு இருந்து Stay உத்தரவு இல்லையெனில் நிறைவேற்று மனுவின் மேல்நடவடிக்கையை நிறுத்தி வைப்பதற்கு எவ்வித அதிகாரமும் நிறைவேற்று நீதிமன்றத்திற்கு இல்லையென பல்வேறு மேற்கோள் தீர்ப்புகள் உள்ளன, இந்நிலையில் இம்மனுவை அனுமதிப்பதால் தீர்ப்பாணையாளருக்கு சட்டப்படியான கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும் என்ற காரணங்களினாலும் மேலும் நிறைவேற்று நீதிமன்றம் அதற்கான அதிகார எல்லையை தாண்டி செயல்பட முடியாது என முடிவு செய்து இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுவதே நீதியின் நோக்கத்தை நிறைவு செய்வதாக அமையும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால்

கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMACHANDRAN SUJATHA
Digitally signed by RAMACHANDRAN SUJATHA
Date: 2026.02.08 13:16:59 +0700

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி.

**<u>மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:</u>**

– **இல்லை -**

RAMACHANDRAN SUJATHA
Digitally signed by RAMACHANDRAN SUJATHA
Date: 2026.02.08 13:17:05 +0700

–

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி.

---

**அசல் / வரைவு ஆணையுரை**

EA. 1/2025 EP.8/2021 இல் O.S.517/1998

நாள் : 11. 02.2026

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

பொள்ளாச்சி

---